வெருகல் பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 A+ன் 05 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 யூலை 11 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 30 ஆம் திகதி சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வெருகல் பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டு குறைபாடு

2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா.178,870 பெறுமதியான வாகன பற்றரி, ரியூப், ரயர் என்பன மூலதனச் செலவினமாகக் காட்டப்பட்டுள்ளதனால் நிலையான சொத்துக்களின் பெறுமதி அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

1.3.3 செலுத்த வேண்டிய கணக்கு

ரூபா.47,954 கூட்டுத்தொகையான 04 சில்லறைக் கடன்கொடுத்தோர் மீதிகள் கொடுத்துத் தீர்க்கப்படாது கடந்த 09 வருட காலமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி<br>ரூபா. | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| வேலைத்திட்டக் கடன்பட்டோர் | 7,142,375 | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம், காலப்பகுப்பாய்வு |
| கடன்கொடுத்தோர் | 13,094,010 | |

| | | |
|---|---|---|
| ஏனைய முதலீடுகள் | 233,820 | விபரப்பட்டியல் |

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1988ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் X பிரிவு 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) | 1987ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 134(1) ஆம் பிரிவு | பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்களை இனங்கண்டு அவற்றிற்கான ஆண்டுப் பெறுமதியை மதிப்பீடு செய்து வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணத்தின் பிரிவு 571 | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா.180,245 தொகையான வைப்புக்கள் பிரமாணத்தின் படி கொடுத்து தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2016 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா.1,242,843 ஆக இருந்ததுடன் அதற்கு முன்னைய ஆண்டின் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா.2,731,376 ஆக இருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா.1,488,553 பின்னடைவைச் சுட்டிக்காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட ஏனைய வருமானம் ரூபா.1,648,200 தொகையாகவும் உள்ளபடியான வருமானம் ரூபா.209,101 தொகையாகவும், வருமான நிலுவை ரூபா.1,439,098 தொகையாகவும் காணப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 ஒப்பந்த முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதி ஆணைக்குழுவின் 2016/01 ஆம் இலக்க 2015 திசெம்பர் 30 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 1.2 ஆம் பந்தியின் பிரகாரம் மாகாண மற்றும் உள்;ராட்சி அதிகார சபைகள் வீதிகளை அமைக்கும் போது கிரவல் போடுதல் போன்ற தற்காலிக பாதை அமைத்தலை தவிர்த்து அதிக காலம் பயன்படுத்தக்கூடிய வகையில் கார்பட் இடுதல், தார் "சுதல் அல்லது கொங்கிறீட் இடுதலை மேற்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்த போதிலும் அதற்கு முரணான வகையில் சபையினால் 05 வீதிகளுக்கு ரூபா. 4,779,010 பெறுமதியில் கிரவல் இடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையினால் புறநெகும நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சூரைநகர் கோயில் வீதிக்கு கொங்கிரிட் இடுவதற்கான ஒப்பந்தம் ரூபா.7,701,794 தொகைக்கு அருண் ஒப்பந்தக்காரருடன் 2016 சனவரி 27 ஆம் திகதி கைச்சாத்திட்டிருந்தது. ஒப்பந்தக்காரரால் வழங்கப்பட்ட செயலாற்றுகை முறியை சபை உறுதிப்படுத்துவதற்காக உரிய வங்கிக்கு அனுப்பிவைத்த போது அது குறித்த வங்கியினால் வழங்கப்படவில்லையென எழுத்து மூலம் சபைக்கு வங்கி அறிவித்தமையினால் குறித்த ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது. எனினும் மோசடியாக முறியை வழங்கிய ஒப்பந்தக்காரரை கறுப்புப்பட்டியலில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காததுடன் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கையினை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக இவ் ஒப்பந்தகாரர் எதிர்வரும் காலங்களில் வேறு அரச நிறுவனங்களிலும் இவ்வாறான மோசடியான செயற்பாட்டை செய்யவதற்கான சந்தர்ப்பம் காணப்படுகின்றது.

3.2 முகாமைத்துவப் பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட 06 வாகனங்கள் ஆறு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அவற்றை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண நிதி ஒழுங்கு விதி இல.163.3 இன் பிரகாரம் முற்பணங்கள் அனைத்தும் 10 நாட்களுக்குள் சீர்செய்யப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 02 தொடக்கம் 10 வருடங்கள் பழமை வாய்ந்த ரூபா.663,213 பெறுமதியான முற்பணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 04 தொடக்கம் 10 வருடங்கள் பழமை வாயந்த கேள்வி வைப்புக்கள், பிடிகாசு மற்றும் நானாவித வைப்புக்கள் ரூபா. 131,001 தொகை தொடர்பாக நிதி ஒழுங்கு விதி இல 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பதிலீட்டு அடிப்படையில் கடமை புரியும் ஊழியர்களுக்கான ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புப் பணத்தை கணிப்பிடும் போது அவர்களின் மொத்தச் சம்பளத்தின் அடிப்படையில் கணிப்பிட வேண்டும். எனினும் 2016 ஆம் ஆண்டில் சபையில் கடமைபுரிந்த 03 பதிலீட்டு அடிப்படை ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புப் பணமானது அடிப்படைச் சம்பளத்தில் கணிப்பிடப்பட்டமையால் ரூபா.62,719 தொகையை குறைவாக நிதியத்திற்கு சபை செலுத்தியிருந்தது.

(உ) People in Need நிறுவனத்தினால் 2012 ஆம் ஆண்டு சபைக்கு கையளிக்கப்பட்ட ரூபா.1,483,472 பெறுமதியான ஐஸ் தொழிற்சாலையை சபை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்காமையால் அங்கு காணப்பட்ட குளிர்சாதனப்பெட்டிகள், மோட்டர்கள் மற்றும் நீர்த்தாங்கிகள் என்பன பயன்படுத்த முடியாத நிலையில் சேதமடைந்து காணப்பட்டன.

(ஊ) சபைக்குச் சொந்தமான 07 கடைகளைக் கொண்ட கடைத் தொகுதிக்கான விலை மதிப்பு செய்யப்படாதும், வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரப்படாதும் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(எ) பிரதேச சபைகளை வலூட்டும் வேலைத்திட்டத்தின் கீழ் மாகாண சபைகள் மற்றும் உள்;ராட்சி அமைச்சினால் ரூபா.6,000,000 தொகை சபைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் மேற்கொள்ள வேண்டிய வேலைகள் தொடர்பாக சரியான மதிப்பீட்டைத் தயாரிக்கத் தவறியமை மற்றும் உரிய காலத்தில் வேலைகளை ஆரம்பிக்கத் தவறியமை காரணமாக சபையின் நிர்வாகப் பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பதற்கு காணப்பட்ட வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது.

3.3 பயன்படுத்தப்படாமல் உள்ள சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான ரூபா 2,272,800 பெறுமதியான 07 அறைகளைக் கொண்ட கடைத்தொகுதியானது 2011 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதிவரை எத்தேவைக்கும் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது.

(ஆ) சபையில் காணப்படும் ரூபா.1,451,750 மொத்தப் பெறுமதியான உழவு இயந்திரம், இரண்டு சக்கர உழவு இயந்திரம், ரோட் ரோலர் மற்றும் முச்சக்கர வண்டி என்பன நான்கு வருட காலமாக பயன்படுத்தப்படாது காணப்பட்ட போதிலும் அவற்றை திருத்தி பயன்படுத்துவதற்கோ அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் VII பிரிவு 168(1) இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எனினும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 02 மாதகால தாமதத்தின் பின்னர் 2017 !ன் 05 ஆம் திகதியே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

4.2 வருடாந்த இருப்பு கணிப்பீடு

2016 ஆம் ஆண்டின் இருப்புக் கணக்கெடுப்பின் போது சபையினால் பராமரிக்கப்படும் நூலகத்தில் 331 புத்தகங்கள் பற்றாக்குறையாகக் காணப்பட்டமை சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் அவை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 மனிதவள முகாமைத்துவம்

மூன்று அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் இரண்டு வருடங்களாக வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும் அதனை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மூன்று முகாமைத்துவ உதவியாளர்கள் பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுகின்ற போதிலும் இரண்டு முகாமைத்துவ உதவியாளர்களுக்கு பதிலீடுகள் இன்றி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) பேரேடுகள் நாளது வரையாக முறையாக பேணப்படுதல். |
| | (ii) சொத்துக்கள் செலவீனங்களின் தன்மை அடிப்படையில் வகைப்படுத்தப்படுதல். |
| | (iii) கடன்பட்டோர், கடன் கொடுத்தோர் பேரேடுகளைப் பேணப்படல். |
| (ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல். |
| | (ii) களஞ்சியப் பேரேடு முறையாகப் பேணப்படல். |
| (இ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |
| (ஈ) ஆளணி முகாமைத்துவம் | இடமாற்றங்கள் வழங்கப்படும் போது பதிலீடுகள் கருத்திற்கொள்ளப்படல். |
| (உ) ஒப்பந்த முகாமைத்துவம் | ஒப்பந்தங்கள் வழங்கப்படும் போது பெறுகை வழிகாட்டி மற்றும் நிதி ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்கள் பின்பற்றப்படுதல். |